1 ☐ CCE PR/NSR & NSPR(D)/900/7805

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]

Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 59 ]

Total No. of Questions : 59 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

**Code No. : 10-T**

**D**

**CCE PR**
**UNREVISED**
**REDUCED SYLLABUS**
**NSR & NSPR**

**Question Paper Serial No. 900**

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

# Subject : First Language — TAMIL

**(ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. & ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Private Repeater / NSR & NSPR)**

ದಿನಾಂಕ : 31. 03. 2023 ] [ Date : 31. 03. 2023

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-45 ರವರೆಗೆ ]

[ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 59-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

[ Turn over

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக : 10 × 1 = 10**

1. உரிச்சொல் தொடர்

   (A) நனிபுகழ் (B) புகழ்

   (C) வருதல் (D) ஓடினான்

2. ஒரு சொல்லை தனியாகப் பிரித்தால் பொருள் தருவது

   (A) இரட்டைக் கிளவி

   (B) வினைச் சொல்

   (C) அடுக்குத் தொடர்

   (D) இடைச் சொல்

3. செய்யுளில் நான்கு சீர்களைப் பெற்று வருவது

   (A) சிந்தடி (B) குறளடி

   (C) அளவடி (D) நெடிலடி

4. செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது

   (A) அணி (B) சொல்லணி

   (C) பொருளணி (D) வேற்றுமையணி

5. வெற்றி பெற்ற வீரனின் நற் பண்புகளைப் பாடுவது

(A) வெட்சி

(B) வஞ்சி

(C) பாடாண்

(D) உழிஞை

6. குயவன் பானை வனைந்தான். இத் தொடரில் வனைந்தான் என்பது

(A) நிகழ்காலம் (B) இறந்தகாலம்

(C) எதிர்காலம் (D) வருங்காலம்

7. கூடைப் பந்தாட்டத்தில் பெங்களூரு வென்றது

(A) பொருளாகு பெயர் (B) இடவாகு பெயர்

(C) காலவாகு பெயர் (D) சினையாகு பெயர்

8. ஓடி விழுந்தான். ஓடி என்பது

(A) பெயரெச்சம் (B) வினைமுற்று

(C) வினையெச்சம் (D) பெயர்ச்சொல்

9. 'உரன் நசைஇ' இத்தொடரில் வருவது

(A) உயிரளபெடை (B) ஒற்றளபெடை

(C) செய்யுளிசை அளபெடை (D) இன்னிசை அளபெடை

10. புறநானூற்றைப் படி. இத்தொடரில் வருவது

(A) இரண்டாம் வேற்றுமை (B) மூன்றாம் வேற்றுமை

(C) நான்காம் வேற்றுமை (D) ஐந்தாம் வேற்றுமை

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக : 5 × 1 = 5**

11. மகாகவி பாரதியார்;

புரட்சிக்கவி : ........................... .

12. நல் அமுது தமிழ்மொழி;

என்னுடைய நாடு : ........................... .

13. ஆக்கம் என்பது செல்வம்;

மாசு என்பது : ........................... .

14. மண் சுமந்தவன் மதுரைச் சொக்கநாதன்;

பிரம்படி கொடுத்தவன் : ........................... .

15. கூழானாலும் குளித்துக்குடி;

கந்தையானாலும் ........................... .

**III. ஒரு தொடரில் விடை தருக : 8 × 1 = 8**

16. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார் ?

17. ‘விண்ணில் இயங்கும் ஞாயிற்றை எதனால் மறைக்க இயலாது ?

18. வேலை வடித்துக் கூர்மையாக்கித் தருவது யாருடைய கடமையாகும் ?

19. புறத்தினில் கருத்த காந்தி யார் ?

20. மொழியின் இலக்கணம் யாது ?

21. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?

22. ஆதி புராணத்தின் மூல நூல் யாது ?

23. விடுகதைகளைக் கொண்டு எவற்றை அறிய முடியும் ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 15 × 2 = 30**

24. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

25. உடலுக்கும் செவிக்கும் இன்பத்தைத் தரவல்லவை எவை ?

26. பெண்கள் பாரினில் எதனை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

27. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை ?

28. நக்கீரர் சங்கப்புலவர்களைப் பிரியும்போது கூறியன யாவை ?

29. நம் தெய்வீகக் கதைகள் உணர்த்தும் உண்மை யாது ?

30. இளைஞன் தன்னை எதனைப் போன்று வழிநடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?

31. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

32. செய்யுள் உறுப்புகள் யாவை ?

33. உரிச்சொல் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

34. காளைக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக் கோட்டையார் கூறுவது என்ன ?

35. நீதிச்சாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

36. திரு.வி.க-வை ஒரு வானம்பாடி என எவ்வாறு கூறலாம் ?

37. மாணிக்கவாசகர் சிவனைப் போற்றி வணங்கும் சிறப்பினை எழுதுக.

38. ''உண்டாலம்ம இவ்வுலகம்'' - என்ற புறநானூற்றுப் பாடல் எந்தக் குறளின் விளக்கமாக அமைந்துள்ளது ?

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $6 \times 3 = 18$**

39. வள்ளுவர் எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறம் என்று சொல்லுகிறார் ?

40. சங்கத் தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினை விளக்குக.

**1**

41. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளில் ஒன்றினை எழுதுக.

42. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

43. தமிழ் விடுகதைகளின் இயல்பையும் சிறப்பையும் குறித்து பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் கூறுவனவற்றைச் சுருக்கி வரைக.

44. சேக்ஸ்பியர் உரையாடல் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார் ?

**VI. குறிப்பு வரைக :** **$2 \times 3 = 6$**

45. புரட்சிக்கவி பாரதிதாசன்

46. திருக்குறள்

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :** **$1 \times 3 = 3$**

47. தற்குறிப்பேற்ற அணி

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **$4 \times 3 = 12$**

48. ''உக்ரம் குறையாது

அக்கினிக் குஞ்சு''

49. ''மற்ற யந்திரங்கள் இரும்பால் ஆனவை

மனித யந்திரங்கள் மூளையால் ஆனவை''

50. ''பாவம் கொஞ்ச நேரமாவது அவர்கள்

அயர்ந்து தூங்கட்டும்''.

51. ''மரம் வளர்த்தால் நரகம் இல்லை''

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 × 3 = 3**

52. ''தவளை தன் வாயால் கெடும்''

*அல்லது*

''குன்றின் மேல் எரியும் விளக்கு போல''

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

53. ''இனிமைத் தமிழ் மொழி'' எனத் தொடங்கும் பாடல்.

*அல்லது*

''ஈன்று புறந்தருதல்'' என வரும் புறநானூற்றுப் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 2 × 4 = 8**

54. நீ அறிந்த விடுகதைகள் இரண்டினை எழுதி விளக்குக.

55. தீப்பெட்டி ஆபீஸிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி.ராஜநாராயணன் கூறியன யாவை ?

*அல்லது*

பிறர்க்கென வாழ்வோரின் அரும்பெரும் பண்புகள் எவையெவை என்று இளம்பெருவழுதி பட்டியலிடுகிறார் ?

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக :** **1 × 4 = 4**

56. ''ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று

எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற

விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்''.

*அல்லது*

''ஆழி சூழும் உலகாளும்

அரசனாக வேண்டுமெனில்

வாழும் வாழ்வில் உன்னையும் நீ

மறந்து வாழ வேண்டுமடா

ஏழையாகி எளியவரின்

எளிய னாக வேண்டுமடா

தோழனாகி யாவர்க்கும்

தொண்டனாக வேண்டுமடா''.

**XIII.** **பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :** **(2 × 2 = 4) 1 × 4 = 4**

57. மனித வாழ்வுக்குத் தேவையானவற்றை அறம், பொருள், இன்பம் எனப் பகுத்துத் தொகுத்துள்ளது வள்ளுவம். காதல் இன்பம் இல்லையென்றால் மனித வாழ்வு இல்லை என்பது வள்ளுவத்தின் தத்துவம். காதல் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வாழ்வில் நிலைத்த இன்பம், உலகியல் இன்பம், அடிப்படை இன்பம், அறிவியல் இன்பம் பெற வேண்டும்.

வினாக்கள் :

a) மனித வாழ்விற்குத் தேவையானவை எவை ?

b) காதல் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு எவ்வெவற்றைப் பெற வேண்டும் ?

**XIV.** **மடல் எழுதுக :** **1 × 5 = 5**

58. நீ கண்டு மகிழ்ந்த சதுரங்கப் போட்டி குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

*அல்லது*

இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற தொழிற்சாலைகள் அமைத்துத் தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் எழுதுக.

**1**

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:** **$1 \times 5 = 5$**

59. ''நவநாகரீக உலகில் பண்பாட்டைக் காப்பதில் மாணவர் பங்கு''

*அல்லது*

''வேளாண் தொழிலின் முக்கியத்துவம்''